

NALLUR ... MUNICIPAL COUNCIL
JAFFNA

வெளிநாட்டுப்
பிரயாணம்
திறமையான சேவைக்கும்
நம்பிக்கைக்கும்,
செலவைக் குறைக்கவும்
MCT 1ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
Tele: 24791, 24886

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

ரெலிபோன்
ரெலக்ஸ்
24 மணி நேர சேவை
பாதுகாப்பான இடம்
Safe Vehicle Parking
MCT 1ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
Tele: 24791, 24886

கடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞூ ஆனி மீ 27 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃ பிறை 3 (11 07 1986) UTHAYAN- A LIVELY TAMIL DIALY கதிர்:- 201

ஆஸ்பத்திரிக்கு லொறியில் வந்த மருந்துகள் திரும்பின

சுகாதார அத்தியட்சகரின்

கடிதத்தைக் காட்டியபோதும் தடைமுகாம் கதவு திறக்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்ட பெரும் தொகையான மருந்து வகைகள் ஆனையிறவுத் தடைமுகாமில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டன.

மருந்து வகைகளை ஏற்றிவந்த லொறிகளின்சிப்பந்திகள், சுகாதார அத்தியட்சகரின் கடிதத்தைக் காட்டிய போதிலும் தடை முகாம் கதவுகள் திறக்கவில்லை.

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து கடிதம் பெற்று வராத காரணத்தினாலேயே இரண்டு லொறிகளும் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாக அறியவந்தது.

மருந்து வகைகளுடன் வவுனியாவில் இருந்த இந்த இரண்டு லொறிகளும் புறப்பட்டு முல்லைத்தீவு வழியாக வந்தன.

வரும் வழியில் நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலைகளுக்கும் மருந்துகளை வழங்கின.

ஆனையிறவுத் தடைமுகாமில் வைத்து லொறிச் சாரதிகள் விசாரிக்கப்பட்டனர்.

அவர்களிடம் கிளிநொச்சி இராணுவ முகாமின் கடிதம் இருக்கிறதா என்று கேட்கப்பட்டது.

நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு வைத்திய சாலைகளுக்கும் மருந்து வகைகள் வழங்க வேண்டியிருந்ததால் முல்லைத்தீவு வழியாக வந்ததாக சாரதிகள் தெரிவித்தனர். அத்துடன் பிராந்திய சுகாதார சேவைகள் அத்தியட்சகரின் கடிதத்தையும் காட்டினர்.

ஆனையிறவு முகாம் அதற்குச் செவிசாய்க்கவில்லை.

'போய் கிளிநொச்சி முகாமில் கடிதம் வாங்கி வா—இப்படி சாரதிகளிடம் கூறி லொறிகளைத் திருப்பி விட்டனர், ஆனையிறவு முகாம்வாசர்கள்.

(உ-எ)

குருநகர் பகுதியில் 7 சடலங்கள் ஒதுங்கின

யாழ்ப்பாணம், ஜூலை 11

நேற்றும் நேற்றுமுன் தினமும் குருநகர் கடல் பகுதியை அண்மித்துள்ள பகுதியில் இருக்கும் கல்முனை என்ற இடத்தில் ஏழு சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளன.

ஆறு சடலங்கள் நேற்றும் ஒரு சடலம் நேற்று முன்தினமும் கரை ஒதுங்கின.

மிகவும் உருக்குலைந்த நிலையில் இருக்கும் இந்தச் சடலங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கடலில் பலியான போராளிகளின் சடலங்களாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

இந்தச் சடலங்கள் கரை ஒதுங்கி இருப்பதை கண்ட ஈ பி ஆர். எல். எப். போராளிகள் அங்கு சென்று உருக்குலைந்த சடலங்களை மீட்டுவந்துள்ளனர். (உ-10)

இராணுவ மரியாதையுடன்

ஏழு போராளிகளின் சடலங்களும் தகனம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

பாலைதீவுக் கடலில் படகுவிபத்தில் பலியான ஈ. பி. ஆர் எல் எவ். இயக்க விடுதலைப் போராளிகள் ஏழு பேரின் சடலங்களும் இராணுவ மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டன.

அவர்களுள் ஒருவரான கஜிர்தனின் சடலம் கடந்த புதனன்று பாஷிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

நேற்று யாழ் பஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த மற்றைய ஆறு போராளிகளினதும் சடலங்களுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் (4 ஆம் பக்கம் பார்க்க)

குடாநாட்டில் நேற்று துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11

கடலில் மரணமான மக்கள் விடுதலைப் படை போராளிகளுக்கு நேற்று குடாநாடு எங்கும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

வீதிகள் எங்கும் ஆங்காங்கே வாழைமரங்கள் கட்டப்பட்டும், கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டும் இருந்தன.

நேற்று மதியத்திற்குப் பின் அரச அலுவலகங்களும் மூடப்பட்டன. கடைகளும் மூடப்பட்டன. வாகனங்கள் ஓடுவதும் நிறுத்தப்பட்டது.

யாழ் நகரில் இறந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சோக இசையும் ஆங்காங்கு ஒலித்தது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன.

யாழ் பஸ் நிலையத்தில் அஞ்சலிக்கூட்டம் ஒன்றும் போராளிகளினால் நடத்தப்பட்டது. (உ - 10)

திருமலை மக்கள் பீதியுடன் வாழ்வு

திருகோணமலை, ஜூலை 11

திருகோணமலையில் தமிழர்கள் மத்தியில் தொடர்ந்து அச்ச உணர்வு நிலவிவருகிறது. மக்கள் பீதியுடன் வாழ்க்கை நடத்துகின்றனர்.

நேற்றுக் காலை 8 மணிக்கு நீக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் 3 மணித்தியால இடைவெளியின் பின்னர் காலை 11 மணிக்கு மீண்டும் அமுலுக்கு வந்தது.

இன்று (வெள்ளி) காலை 8 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்படுகிறது.

மீண்டும் எத்தனை மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வரும் என்பது இன்று காலை அறிவிக்கப்படும்.

புதன்கிழமை காலை 6 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் தொடர்ச்சியாக 26 மணித்தியாலம் அமுலாக்கப்பட்ட பின்னர் நேற்றுக் காலை 8 மணிக்கு நீக்கப்பட்ட போது, மக்கள் முண்டியடித்துக் கொண்டு கடைகளில் உணவுப் பொருள்களை வாங்குவதில் ஈடுபட்டிருந்தனர்.

தமிழ் மக்கள் பதற்றத்தின் மத்தியில் அச்ச உணர்வுடன் உணவுப் பொருள்களை வாங்கிக் கொண்டு வேகமாக வீடுகளுக்குத் திரும்பிச் செல்வதிலேயே அக்கறை காட்டினர். சந்திகளில் நின்று உரையாடுவதைக் கூட தவிர்த்துக் கொண்டனர்

இடைவேளையில் நகரில் பொலிஸார், இராணு (4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

கடைசியாக நின்று மோதகம் வாங்கிச் சன்மானம் பெற்ற கிரிசாம்பான் மாதிரி யாரும் ஒரு ஆளாவது இருக்கினமோ எண்டு சோதிச்சுப் பாத்தினமோ சில வேளை...!

இன்று முதல் லொறிகள்

பளையுடன் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

இன்றுமுதல் லொறிப் போக்குவரத்துச் சேவைகள் பளையுடன் இடை நிறுத்தப்படும்.

இவ்வாறு வடபிராந்திய லொறி போக்குவரத்து உரிமையாளர் சங்க கூட்டத்தில் நேற்று தீர்மானிக்கப்பட்டது.

ஆனையிறவைத் தாண்டிச் செல்லும் சகல லொறிகளும் பலாலி, கோட்டை முகாம்களுக்குச் சென்று 'பாஸ்' எடுக்கவேண்டும் என்ற அரசின் கட்டுப்பாட்டை ஆட்சேபிக்கும் விதத்திலே இந்த முடிவு எடுக்கப்பட்டது

இலங்கை போக்குவரத்துச் சபை சேவைகளையும் பளையுடன் நிறுத்தும்படி இ போ. சபையை கேட்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

(இ-5)

11 தமிழர்களை ஊர்காவல்படை சுட்டுக் கொன்றது

முள்ளிப்பொத்தானையில் உள்ள குடியேற்றத் திட்டத்தில் சம்பவம்

திருகோணமலை, ஜூலை 11

6 பெண்கள், 4 ஆண்கள், ஒரு ஏழு மாதக் குழந்தை உட்பட 11 தமிழர் புதன்கிழமை மாலை முள்ளிப்பொத்தானைப் பகுதியில் உள்ள தமிழ்க் குடியேற்றத் திட்டத்தில் ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தாக்குதலில் படுகாயங்களுக்காளான 5 தமிழ் பெண்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

திருகோணமலை-கண்டி வீதியில் திருமலையில் இருந்து 17 மைல் தொலைவில் உள்ள முள்ளிப் பொத்தானைப் பகுதியில் தமிழர்கள் வசிக்கும் 9 ஆம் கொலனியில் இச் சம்பவம் நடைபெற்றது.

இறந்தவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

1. என். மங்களப் பிள்ளை - வயது 80
2. நல்லதம்பி அருளம்பலம் - வயது 40
3. கணபதிப்பிள்ளை யோகேஸ்வரி - வயது 22
4. ராஜகோபால் சிவக்கொழுந்து (பெண்) - வயது 40
5. குழந்தைவேலு இரத்தினம்மா - வயது35
6. சுந்தரம் பாக்கியம்- வயது 75
7. குமாரசாமி சாந்தி- வயது 12
8. ஏ. பேச்சிமுத்து - வயது 75
9. குட்டி சரவணை - வயது 80
10. வீரக்குட்டி நேசம்மா - வயது 65
11. சந்திரலிங்கம் சசிமாலா - 7 மாதம்

இவர்களின் சடலங்கள் திருகோணமலை ஆஸ்பத் (4 ஆம் பக்கம் பார்க்க)

ஹோட்டல்மீது குண்டு வீச்சு

கொழும்பு, ஜூலை 11

கொழும்பில் உள்ள ஹோட்டல் எம்பரஸ்மீது நேற்றிரவு 7.30 மணிக்கு குண்டு வீசப்பட்டது.

இதனால் ஹோட்டல் பாதுகாவலர் உட்பட மூன்றுபேர் காயம் அடைந்தனர்.

காரில் வந்த இனந்தெரியாத நபர்களே குண்டை வீசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1984 ஆம் ஆண்டு சர்வகட்சி மாநாடு நடைபெற்றபோது அதில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிக் குழு இந்த ஹோட்டலில்தான் தங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது (உ)

கடத்தல் முயற்சி அகப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 11

மல்லாகத்தில் புதன் இரவு வாகனக் கடத்தல் ஒன்றில் ஈடுபட்டிருந்த சிலர் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

அவர்களைக் கண்டித்து விடுவித்த புலிகள், இது பற்றி அவர்களது அமைப்பிடமும் எச்சரிக்கை விடுத்திருப்பதாகத் தெரிகிறது. (உ)

இராணுவ முகாமுக்கு

பெர்மிட் காட்டச் சென்ற லொறியை நோக்கிச் சூடு

யாழ்ப்பாணம், ஜூலை 11

புத்துவெட்டுவான் இராணுவ முகாமுக்கு பெர்மிட்காட்டச் சென்ற லொறிச் சாரதி அங்கு பலமான தாக்குதலுக்கு உள்ளானாராம். இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது:

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த லொறி ஒன்று வவுனியாவில் சீருடையினரால் சோதனை இடப்பட்டது. வவுனியாவில் சோதனைகள் முடிந்ததும் புத்து வெட்டுவான் இராணுவ முகாமுக்கும் சென்று பெர்மிட்டைக் காட்டும்படி வவுனியா சிப்பாய்கள் லொறிச்சாரதிக்கு பணித்தனராம்

இதனை அடுத்து லொறி புத்துவெட்டுவான் இராணுவ முகாமுக்குச்சென்ற பொழுது அங்கு லொறியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற் (4 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ முகாமில் ஏற்பட்ட விசித்திர அனுபவம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

வாகன பாஸ் பெறுவதற்காக பலாலி இராணுவ முகாமுக்குச் சென்ற வாகன உரிமையாளர்களுக்கு நேற்று முன்தினம் ஒரு விசித்திர அனுபவம் ஏற்பட்டது.

சம்பவ தினம் 40 பேர் வரை பாஸ் பெறச் சென்றிருந்தனர்.

10 பாஸ்கள் மட்டும் வழங்கப்படும் என்று அங்கு இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தாராம்.

அதற்காக அவர் விசித்திர நடைமுறை ஒன்றையும் கடைப்பிடித்தார்.

அந்த 40 பேரையும் நோக்கி 10 பாஸ்களும் வீசப்பட்டனவாம்.

வாகன உரிமையாளர்கள் போட்டி போட்டு பாஸ்களைப் பொறுக்கி எடுத்தனர்.

பத்துப்பேர் தவிர ஏனையோர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். (இ-5)

தமிழும் ஆங்கிலமும்

அரச கரும மொழிகளாகலாம்

அ. க. மாநாட்டில் ஆராயப்படும்

கொழும்பு, ஜூலை.11

சிங்களத்துடன, தமிழ், ஆங்கில மொழிகளையும் அரசகரும மொழிகளாக்கும் யோசனை பற்றி ஜூலை 15 இல் மீண்டும் கூடும் அரசியல் கட்சிகள் மாநாட்டில் ஆராயப்படவிருக்கின்றது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில், ஏனைய கட்சிகளின் பரிசீலனைக்கு இந்த யோசனை சமர்ப்பிக்கப்படும்என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கை அரசு, புதுடில்லிக்கு அனுப்பிய புதிய யோசனைகளில் தமிழ், ஆங்கில மொழிகளையும் அரச கரும மொழிகளாக்கும் திட்டம் பற்றியும் தெரிவிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ-2)

15 ஆம் திகதி மாநாட்டில் கூட்டணி பங்குபற்றுமா?

ஜே. ஆரை சந்தித்த பின் முடிவு

சென்னை, ஜூலை 10

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் நடத்தப்படும் நேரடிப் பேச்சுக்களின் பலாபலன்களைப் பொறுத்தே, தமிழர் விடுதலைக் கூட்டணிக் குழு, ஜூலை 15 அரசியல் கட்சிகள் மாநாட்டில்பங்குபற்றும்.

இப்படி சென்னையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் கூட்டணிக் குழுவில் இடம் பெறும் உறுப்பினர்களின் பெயர்களை கூட்டணி அரசியல் குழு நேற்று வெளியிட்டது.

குழுவில் ஆறு பேர் அங்கம் வகிக்கும். உறுப்பினர்களின் பெயர்கள் வருமாறு:

1. திரு. எம். சிவசிதம்பரம்
2. திரு. அ. அமிர்தலிங்கம்
3. திரு இரா. சம்பந்தன்.
4. திரு. அ. தங்கத்துரை
5. திரு வெ யோகேஸ்வரன்
6. திரு. வீ. ஆனந்தசங்கரி

இக்குழுவில் இலங்கையில் உள்ள கூட்டணிப் பிரமுகர்கள் மூவர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அவர்கள் விவரம் வருமாறு:

1. பி. எஸ். சூசைதாஸன்
2. திரு. ஏ. சம்பந்தமூர்த்தி
3. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகர் ஒருவர். (உ-எ-2)

சுபநேரம்

11-07-1986
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
5 59 முதல் 7.29 வரை
ராகுகாலம்:-
10.29 முதல் 11 59வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
சதுர்த்தி விரதம்
மாணிக்கவாசகர் குரு
பூஜைத் தினம்

வவுனியா தேடுதலில் 3 தமிழர் சுட்டுக்கொலை 50 பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 11

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை 5 மணி முதல் பாதுகாப்புப் படையினர் நடத்திய பத்து மணி நேர தேடுதல் வேட்டையின் போது மூன்று அப்பாவித் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் சுமார் 50 பேர் வரை கைது செய்யப்பட்டனர்.

வயலில் வேலை செய்து கொண்டிருந்த மூன்று பேரே சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது

வவுனியா, செட்டிகுளம்,பறையனாலங்குளம் ஆகிய இடங்களில் உள்ள முகாம்களில் இருந்து வந்த ஐநூறுக்கும் அதிகமான சிப்பாய்களே இந்த தேடுதல் வேட்டையை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா ஆயுதப் படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பலர் அதிகாலை படுக்கையில் வைத்துத் தட்டி எழுப்பப்பட்டு கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது (உ-6)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

என்.சி.ஈ பரீட்சை: மாணவர் குழப்ப நிலை

யாழ்ப்பாணம், ஜூலை 11

இந்த வருடம் தொடக்கம் அரசாங்கத்தால் நடத்தப்படும் ஆங்கில தேசிய தராதரப் பத்திரப் பரீட்சைக்கு (என். சி. ஈ.) விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் தமக்கு யாழ்ப்பாணத்தில் பரீட்சை நிலையம் அமைக்கப்படவில்லை என்பதால் குழப்பமடைகின்றனர்.

இவர்களுக்கான பகுதி I பரீட்சை ஏற்கனவே முடிந்து விட்டது அதில் சித்தியெய்தியவர்களுக்கு பகுதி II இற்கான பரீட்சைத் திகதி அனுப்பப்பட்டுள்ளது.

பகுதி II இற்கான விண்ணப்பங்கள் கோரும்போது யாழ்ப்பாணத்தில் பரீட்சை நிலையம் அமைப்பதாக கூறப்பட்டது.

இப்போது சகல பரீட்சார்த்திகளையும் கொழும்புக்கு, 27 ம் திகதி பரீட்சைக்கு வரும்படி கேட்கப்பட்டிருக்கிறது.

பரீட்சார்த்திகளில் பலர் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடங்கவுள்ள க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்கு தோற்ற வேண்டியுள்ளவர்கள்.

இவர்கள் 27ம் திகதி கொழும்புக்குச் சென்றுவிட்டு திரும்பி முதலாம் திகதி உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதென்பது, தற்போதைய போக்குவரத்து சூழ்நிலையில் மிகவும் சந்தேகமானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்வருடம் பகுதி I இல் சித்தியடைந்தவர்கள் இவ்வருடமே பகுதி II இல் தோற்ற வேண்டும் என்றும்—

இல்லாவிடில் அடுத்த வருடம் பகுதி I இல் தோற்றி சித்தி அடைந்த பின்பே பகுதி II இல் தோற்றலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மேற்படி பரீட்சார்த்திகள் யாழ் நகரில் ஒரு பரீட்சை நிலையம் அமைக்கும்படியும் அல்லது பரீட்சைத் திகதியை மாற்றும்படியும் கல்வித் திணைக்களத்தை கேட்டுள்ளனர். (உ-5)

சைவசமய பாடப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்தும் அகில இலங்கை சைவ சமய பாடப் பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 8ஆம் திகதி நடைபெறும்.

இதற்கான பிரசுரங்களை 450 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள சைவ பரிபாலன சபை வெளியிட்டுள்ளது. (இ-3)

பாவனையாளர்களிடம் அறவிடப்படுவதைவிட 2 மடங்கு அதிக பணம்

இலங்கை மின்சார சபைக்கு யாழ் அ.வி.சபை செலுத்துகிறது

யாழ். அபிவிருத்திச் சபை, மின் பாவனையாளர்களிடமிருந்து மாதாந்தம் மின்சார வருமானமாக பெறும் தொகையிலும் பார்க்க இருமடங்கு அதிக பணத்தை இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டியுள்ளது.

சட்டவிரோத மின் பாவனையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் முகமாக ஓர் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

15 ஆம், 16 ஆம் திகதிகளில் நடைபெற உள்ள இக்கருத்தரங்கில் பங்குபற்றுமாறு, யாழ் அபிவிருத்திச்சபை அலுவலக மின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை யாழ் அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் கேட்டுள்ளார். (இ-5)

25 ஆம் திகதி

இனப்படுகொலைக்கு எதிரான எதிர்ப்பு நாள்

யாழ்ப்பாணம், ஜூலை 11

இனப்படு கொலைகளுக்கெதிரான எதிர்ப்பு நாள் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படும்.

தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்துக்கான இணைப்புக்குழு இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இது சம்பந்தமாக வெளியிடப்பட்ட அறிக்கை விவரம் வருமாறு:-

தமிழ்ப்பேசும் மக்களுக்கெதிராக அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற இனப்படுகொலை நடவடிக்கைகள் அண்மைக் காலத்தில் உச்சக் கட்டத்தை அடைந்து கொண்டிருக்கின்றன.

இப்படுகொலைகளுக்கெதிராக தமிழ்பேசும் மக்களாகிய நாம் ஒன்றிணைந்து எமது காத்திரமான எதிர்ப்பைத் தெரிவிப்பது இன்றைய கால கட்டத்தில் தவிர்க்க முடியாததொன்றாகி விட்டது.

இதனை ஒவ்வொரு தமிழ்பேசும் பிரஜையும் நன்குணர்ந்து செயற்படுவது காலத்தின் தேவை.

தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழு ஏனைய வெகுஜன அமைப்புக்களுடன் இணைந்து 25-7-86 வெள்ளிக்கிழமையை இனப்படுகொலைக்கெதிரான எதிர்ப்பு நாளாகப் பிரகடனம் செய்கின்றது.

இத்தினத்தில் எமது பூரண எதிர்ப்பையும் கண்டனத்தையும் எழுச்சியையும் ஒற்றுமையையும் இலங்கை அரசிற்குக் காண்பிக்கும் அதே வேளையில் நாம் படும் இன்னல்களை அகில உலகிற்கும் வெளிப்படுத்தவும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.

25-7-86 சகலரும் எமது அலுவல்கள் அனைத்தையும் பகிஷ்கரிப்போம். தமிழ்பேசும் மக்களனைவரும் இணைப்புக்குழு குறிப்பிடும் பொது இடங்களில் கூடி கண்டனப் பொதுக் கூட்டங்களை நடத்துவதன் மூலம் எமது எதிர்ப்பைத் தெரிவிப்போம் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

தமிழன் என்ற ஒரே காரணத்துக்காக ஒழிப்பு நடவடிக்கை

மண்டைதீவு கூட்டத்தில் பங்குத்தந்தை

மண்டைதீவு, ஜூலை. 11

தமிழர் என்ற ஒரே காரணத்தால் அவ் இனத்தை பூண்டோடு ஒழிக்க அரசு முயற்சி எடுத்துவருகின்றது.

மண்டைதீவு தெற்கு கடற்கரையில் வைத்து இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்ட மீனவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக செவ்வாய் காலை மண்டைதீவில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய மண்டைதீவு பங்குத் தந்தையும் பிரசைகள் குழுத் தலைவருமான ஜே. கமிலஸ் நிமலன் அடிகள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:-

கடந்த வருடம் நெடுந்தீவு குமுதினிப் படகில் பிரயாணிகளைக் கொன்று குவித்தார்கள்.

இவ்வருடம் மண்டைதீவிற்கு தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக மீன்பிடிக்க வந்த 31 மீனவர்களைக் கண்டதுண்டமாக வெட்டி கொலைசெய்தார்கள்.

எமக்கு மேலே ஒருவர் இருக்கின்றார் அவர்தான் எமது இனத்தைக் காப்பாற்ற வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்க முகாமையாளர் திரு டொமியான் சூரி பேசுகையில்; அரசு திட்டமிட்டு மீனவ சமுதாயத்தைப் பழிவாங்குகின்றது என்றார். (ஒ-இ-

நல்லநாயகம் அவதூறு வழக்குத் தீர்ப்பு 17 இல்

கொழும்பு, ஜூலை 11

கல்முனைப் பிரசைகள் குழுத் தலைவர் திரு போல் நல்லநாயகம் மீது தொடரப்பட்ட அவதூறு வழக்கில் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கப்படும்.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு கே. விக்னராசா இதனை அறிவித்தார்.

பொய்யான தகவல்களைப் பரப்பி அரசுக்கு எதிரான உணர்ச்சிகளைத் தூண்டி விட்டதாகவும் அவதூறு செய்ததாகவும் திரு. நல்லநாயகம் மீது இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விசாரணை முடிவில் இருதரப்புச் சட்டத்தரணிகளும் தொகுப்புரை நிகழ்த்தினர்.

எதிர் தரப்பில் சட்டத்தரணி எஸ் நடேசன், கியூ சி. ஆஜரானார்.

அரச தரப்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுனில் டி. சில்வா ஆஜரானார். (இ-எ)

சமய சந்நிதிகளில்

காரைநகரில் மணவாளக்கோல திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 11

காரைநகர் வலந்தலை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மணவாளக் கோலத் திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2-00 மணி தொடக்கம் அபிஷேகமும் விசேட மேளக்கச்சேரியும் இடம்பெறும்.

சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்கள் அபிஷேகத்தை நடத்துவார். (இ-ஒ)

சிவபூதராயர் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம் ஜூலை 11

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ சிவபூதராயர் ஆலய வருடாந்த திருவிழாக்கள் ஆரம்பமாகி நடந்து வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும் நாளை சனிக்கிழமை தேரும், ஞாயிறு தீர்த்தமும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனமும் நடைபெறும். (ஒ)

அளவெட்டி தெற்கு முத்துமாரியம்மன் உற்சவாரம்பம்

அளவெட்டி தெற்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

இரதோற்சவம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலையிலும் தீர்த்தோற்சவம் 21 ஆம் திகதி திங்கட்கிழமையும் இடம்பெறும். (ஒ-ஏ)

கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி (பன்றிக்கோட்டுப் பிள்ளையார்) ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் 13 திகதி ஆனி உத்தர தினமான ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கின்றது.

12-ஆம் திகதி சனிக்கிழமை பகல் 10 மணி முதல் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய் சாத்தும் வைபவமும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு தூபி அபிஷேகமும் 9 மணிக்கு மகாகும்பாபிஷேகமும் நடைபெறும். (ஒ)

பசுபதீஸ்வரர் ரதோற்சவம்

புலோலி - பருத்தித்துறை பசுபதீஸ்வர (சிவன்கோயில்) ரதோற்சவம் நாளையும், தீர்த்தம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும். (ஒ-118)

திருவுருவப்படம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

மாணிக்கவாசகர் குருபூசையை முன்னிட்டு அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் சமயகுரவரின் படத்தை அன்பளிப்புச் செய்வர்.

தமிழகத்திலிருந்து வரவழைக்கப்பட்ட இப்படம் யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்படும்.

இன்று வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு கஸ்தூரியார் வீதி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனையைத் தொடர்ந்து பாடசாலை அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளையிடம் மன்றச் செயலாளர் திரு. கா. ரகுநாதன் இதனை அன்பளிப்பார். (ஒ)

மொழித்தின விழா

யாழ்ப்பாணம், ஜூலை 11

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் மொழித்தின விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

யாழ் மத்திய கல்லூரி இளைப்பாறிய அதிபர் திரு நா. சா. இரத்தினசிங்கமும் திருமதி. இரத்தினசிங்கமும் முதன்மை விருந்தினராக வைபவத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவிருக்கின்றன. (இ)

மாநிலம் மாவட்டம் உள்ளூர்

தமிழ் இலக்கிய திறனாய்வு எப்படி அமைய வேண்டும்

கலாநிதி சபா. ஜெயராசா விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

தமிழ் இலக்கியத் திறனாய்வு நவீன அறிவியல், சமூக உளவியல் தழுவியதாக அமைதல் அவசியம். அத்தகைய திறனாய்வு நமது படைப்புகளை உலக தரத்துக்கு இட்டுச் செல்லும்.

நல்லூர் இந்து விடுதியில் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய 'என்றாவது ஒரு நாள்" குறுநாவல் வெளியீட்டு விழாவில் தலைமையுரை ஆற்றிய யாழ் பல்கலைக் கழக சிரேஷ்ட கல்வித்துறை விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசா இவ்வாறு குறிப்பிட்டார்.

"இன்று தமிழ் இலக்கிய விமர்சனத்தைப் பொறுத்த வரையில் மேலைநாட்டுடன் ஒப்பிடும்போது நாம் நூற்றாண்டு பின்தங்கி விட்டோம்.

தனிப்பட்ட நபர்களின் தனிப்பட்ட உளவியலை மையமாக வைத்து திறனாய்வு செய்யும் முறையை விடுத்து சமூக உளவியலை ஆதாரமாகக் கொண்டு விமர்சிக்கும் கலை மேல் நாடுகளில் வளர்வதை நாம் நோக்க வேண்டும்.

பிரெஞ்சு அறிஞன் லூசியன் போன்றவர்கள் இத்துறையில் நல்ல பங்களிப்பைச் செய்துள்ளார்கள்.

இவ்வாறு கலாநிதி சபா ஜெயராசா தமது தலைமையுரையில் கூறினார்.

அடுத்துப் பேசிய மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா பின்வருமாறு குறிப்பிட்டார்:-

படைப்பாளிகள் விமர்சகர்களை இனங்கண்டு கொள்ள வேண்டும். இருவகை விமர்சகர்கள் உள்ளனர்.

பூனை தனது குட்டியையும் கௌவுகிறது எலியையும் கௌவுகிறது. முன்னையது பாதுகாப்புக்காகவும் [illegible] கொலை கருதியும் செய்[illegible] காண்கிறோம். இது விமர்சனத் துறைக்கும் பொருத்தமாகும்.

மற்றவர்களையும் கௌரவிக்கவேண்டும்

யாழ் பல்கலைக் கழகம் பண்டிதமணி போன்ற அறிஞர்களைக் கௌரவித்ததைப் பாராட்டுகிறோம். ஆனால் அது யாழ்ப்பாண சமுதாயத்தின் ஒரு தட்டினை மட்டும் பிரதிபலிக்கும். அதே போன்று மேல் தட்டில்லாத பகுதி சார்ந்த நமது அறிஞர்களையும் கௌரவிக்க யாழ் பல்கலைக் கழகம் முன்வரவேண்டும் என்றும் ஜீவா குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி எஸ். மௌனகுரு தமது ஆய்வுரையில் கூறியதாவது:-

"எழுத்தாளர்கள் நன்கு படிக்கவேண்டும். அறிவியல் கருத்துக்களையும் பெறுவது நலம். எழுத்தாளர்களுக்கு இலக்கியக் கருத்தரங்குகளுடன் அறிவியல் கருத்து அரங்குகளையும் ஒழுங்கு செய்வது அவசியம். அப்போது எழுத்தாளர்களின் ஆளுமை வளர்ந்து படைப்பிலக்கியத்தின் தரமும் உயரும்.

எழுத்தாளர்கள் ஜனரஞ்சகமாக எழுதி பொழுதுபோக்கு இலக்கியங்களைப் படைக்கலாம். அதனால் எழுத்தாளர்கள் குறுகிய காலத்தில் செல்வாக்கையும் செல்வத்தையும் தேடலாம். ஆனால் இது எழுத்தாளனுக்கு ஆத்ம திருப்தியைத் தருமா?

ஆனால் மாறாக சமூக நலனை நாடி சமுதாயப் பார்வையுடன் இலக்கியப் படைப்பில் எழுத்தாளன் மானுட மேம்பாட்டுக்கு நல்ல பங்களிப்புச் செய்பவன் ஆகலாம் — என்றார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், கவிஞர் புதுவை இரத்தினதுரை, பேராசிரியர் நந்தி நூலாசிரியர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் உட்பட பலரும் பேசினர்.

இணுவில் கலை இலக்கிய இளைஞர் செயலாளர் திரு. கந்தையா சிறீகணேசன் நன்றியுரை கூறினார். (உ-9)

விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 11

பாடசாலை முன்னிலைக் கல்விச் சான்றிதழிற்கும், டிப்ளோமாச் சான்றிதழிற்குமான பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள், கோக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியிலுள்ள திறந்த பல்கலைக்கழக பிரதேச அலுவலகங்களில் முதலாம் திகதி தொடக்கம் வழங்கப்படுகின்றன.

நுகேகொடைத் தபாலகத்தில் செலுத்தத் தக்கதாக, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகப் பதிவாளரின் பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளைகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று திறந்த பல்கலைக்கழக உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

தீவுப்பகுதி நிலைமைபற்றி கருத்தரங்கு

வேலணை, ஜூலை. 11

தீவுப்பகுதியின் இன்றைய நெருக்கடி நிலை பற்றிய கருத்தரங்கொன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3-30 மணிவரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் யாழ் பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவர் திரு. எஸ். பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

கருத்தரங்கில் தீவுப்பகுதிக்கான போக்குவரத்து உணவு விநியோகம், வைத்தியசேவை, தபால்-தந்தி சேவை போன்ற அத்தியாவசிய தேவைகள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் பற்றி ஆராயப்படும்.

இக்கருத்தரங்கை யாழ் மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள சிரேட்ட உதவி ஆணையாளர் திரு. தே. பரமலிங்கம், யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை விரிவுரையாளர் திரு இரா. சிவச்சந்திரன், புங்குடுதீவு விழிப்பு ஒன்றியத் தலைவர் திரு. சு. ஈஸ்வரத்தினம் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கா. குகபாலன் ஆகியோர் கூட்டாக இணைந்து ஏற்பாடு செய்திருக்கிறார்கள். (உ-167)

காரைநகரில் ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெறும் இனப் படுகொலைகளைக் கண்டிக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் இன்று வெள்ளிக்கிழமை காலை காரைநகரில் நடைபெறும். (இ-எ)

யாழ். பல்கலைக்கழகக் கலாசாரக் குழுவினரின்
'மண்சுமந்த மேனியர் - 2'
உங்கள் ஊர்களிலும் மேடையேற்ற நீங்கள் விரும்பினால் யாழ் பல்கலைக்கழகக் கலாசாரக் குழுவைச் சந்தியுங்கள்.
—கலாசாரக் குழு,
யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

பிரயாண ஒழுங்குகள்
✱ கனடா
✱ ஜேர்மன்
✱ பிரான்ஸ்
✱ டென்மார்க்
ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், விசா,
பொன்ட், (BOND) ரிக்கட்
ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.
INTERSUN GROUP
சின்னத்தம்பி அவெனியூ,
மகளிர் கல்லூரிக்கருகாமையில்
மானிப்பாய்.

ரெலிகுளோப் ரெலிபோன் சேவை

⊡ ஆறு லைன்கள் !
⊡ வியத்தகு விரைவு !
⊡ அருகில் அமர்ந்து அளவளாவும் தெளிவு !
⊡ சந்தோஷத்தில் ஆழ்த்தும் சௌகரியங்கள் !
⊡ நிறைவான சேவைக்கு நியாயமான கட்டணம் !
⊡ கோட்டைக் குண்டடி எட்டாத பணிமனை !
உங்கள் அடுத்த ரெலிபோன் அழைப்பு—
ஆனந்தமான அனுபவமாக அமைய நாடுங்கள்:—
ரெலிகுளோப், ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.

உதய சங்கற்பம்

விடியுமுன் எழுந்து யோகாசனம் செய்து உடலைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.
நாமாவளி சொல்லி, உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.
நீதி போதனை, வரலாற்றுச் சம்பவங்களைக் கேட்டு 'ஆன்மா' வைத் தூய்மைப்படுத்த வேண்டும்!

— காஞ்சி முனிவர்

உதயன்
உண்மை - [illegible] - நடுநிலைமை

இல, 15 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், 11-07-86
தொலைபேசி 24805
22073
த. பெ. 23

ஒற்றை ஆட்சியும் மாகாணசபையும்

பதினைந்து நாள் பதகளிப்பு, பரபரப்பின் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. அரசாங்கம் சமர்ப்பித்த மாகாண சபை யோசனை குறித்து ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது அந்த முடிவாகும்.

மாகாண சபை யோசனை, இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வைக் காண்பதற்குரிய அத்திவாரமாக இந்தியா கருதுகிறது. அதனால் இந்தியாவின் விருப்பத்தின் பேரில் கூட்டணியினர் இலங்கை அரசுடன் பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் அவர்கள் கொழும்பு வருவதற்கு திகதி நிர்ணயித்ததாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

மாகாண சபைத் திட்டத்தைக் கருவாக வைத்துத் தமிழர் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தீர்வை உருவாக்க முடியும் என்று நம்புவதற்கு இடமிருப்பதாக எமக்குத் தோன்றவில்லை.

பல இன, பல மொழி பேசும் மக்கள் வாழும் நாட்டில் அந்தந்தப் பிரதேச மக்கள் தங்கள் அலுவல்களைத் தாமே பார்ப்பதற்கு— தம்மைத் தாமே ஆளுவதற்கு — தமது பிரதேசங்களை விருத்தி செய்வதற்கு — தமது நலன்களைக் குறைவின்றிக் கவனிப்பதற்கு ஆகக் குறைந்தது பிரதேச சுயாட்சியாவது தேவை.

ஒற்றையாட்சியை வைத்துக் கொண்டு, அதற்குக் கீழ் அதிகாரங்களை எந்தளவு பரிமாணத்துக்குப் பகிர்ந்தாலும் சிறுபான்மை மக்கள் பூரண சுதந்திரம் பெற முடியாது. தமக்கு உள்ள பிறப்பு உரிமைகளைச் சரிவர அனுபவிக்க வழி பிறக்காது என்பது சர்வ நிச்சயம்.

ஏனெனில் அதிகாரத்தை இழுத்துப் பிடிக்கும் சக்தி மத்திய அரசிடமே இருந்து கொண்டிருக்கும் மத்திய அரசில் பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகள் தான் முடிவு எடுக்கும் வல்லமை உள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் சிறுபான்மை மக்களுக்கு எதிராக— அவர்களின் நலன்களுக்கு மாறாகவும் முடிவெடுத்து அதிகாரத்தை உடனடி இழுத்துத் தமக்குள் வைத்திருக்கலாம்.

ஆகையால் இலங்கையில் தமிழர்கள் சுயமரியாதை உள்ள, சுதந்திர புருஷர்களாக வாழ்வதற்கு வழி செய்யக் கூடிய ஆகக் குறைந்த அரசியல் முறை பிரதேச சுயாட்சி தான்.

அரசாங்கம் அதனை நினைத்துப் பார்க்கவும் விரும்பவில்லை. அச்சம் கொள்கிறதோ என்பதும் தெரியாது. பிரதேச சுயாட்சி நாட்டைப் பிரிப்பதற்குச் சமம் என்று அரசு நினைக்கக் கூடும், அது தவறு.

ஒற்றையாட்சி வேறு; ஐக்கிய இலங்கை வேறு. ஐக்கிய இலங்கையைப் பேணுவதற்கு ஒற்றையாட்சிதான் தேவை என்றும் சிலர் நினைக்கிறார்கள். அதுவும் தவறு.

சுயாட்சி உள்ள பிரதேசங்கள் ஒன்றுகச் சேர்ந்து ஓரே நாடாக இயங்கலாம். நாட்டின் ஐக்கியத் தன்மை அதனால் கெட்டுவிடாது. நாட்டின் பலம் குறைந்துபோகாது. அபிவிருத்தி குன்றாது. ரஷ்யா, அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் அதற்கு நல்ல முன் உதாரணங்கள்.

உலக மக்களிடையே கல்வி அறிவு வளர்கிறது அதனால் மக்களிடையே விழிப்புணர்ச்சியும், எழுச்சியும் மலர்கின்றன.

அதன் விளைவு: எந்தப் பகுதி மக்களாயினும் தம்மைத் தாமே ஆள விரும்புகிறார்கள். தமது அலுவல்களில் பிறர் வந்து தலையிடுவதை அல்லது தமது தலைவிதியைப் பிறர் நிர்ணயிப்பதை வெறுக்கிறார்கள்.

இதனை இலங்கை அரசும், சிங்கள மக்களும் உணரவில்லை. பிரதேச சுயாட்சி என்றதும் அவர்கள் பீதிகொள்வதற்கு அதுவும் ஒரு காரணம்.

ஒற்றையாட்சியைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று சிங்கள மக்கள் விரும்பும் வரை இலங்கையில் இனப்பிரச்சினை தீராது என்பதனை அடித்துச் சொல்லலாம்.

மாகாண சபை, ஒற்றையாட்சி முறையின் கீழ்தான் என்று அரசு திரும்பத் திரும்பக் கூறி வலியுறுத்துகிறது. மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை ஒப்படைப்பதா (Delegation of Powers) அல்லது அதிகாரத்தைப் பரவல் செய்து பகிர்ந்து கொடுப்பதா (Devolution of Powers) என்பதிலும் திட்டவட்டமான முடிவு இல்லை.

இதற்கிடையில் மாகாண சபைத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கப்படுவதற்கு முன்னரே, அதற்குத் தென்னிலங்கையில் எதிர்ப்பு கிளம்பிவிட்டது.

அவ்வாறாயின் எவ்வாறு ஐயா, இனப்பிரச்சினை தீரும் என்று நம்புவது?

பங்களாதேஷில் புதிய மந்திரி சபை

டாக்கா, ஜூலை 10 ஜெனரல் எர்ஷாட் 26 உறுப்பினர் அடங்கிய மந்திரிசபை ஒன்றை புதிதாக அமைத்துள்ளார்.

கடற்படை, விமானப் படைத் தலைவர்களை மந்திரிசபையிலிருந்து அவர் நீக்கிவிட்டார்.

மிஷானுர் ரஹ்மான் சௌத்திரி பங்களாதேஷின் புதிய பிரதம மந்திரியாகப் பொறுப்பேற்றுள்ளார்.

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதில் பெரிய நடவடிக்கையாக இது கருதப்படுகிறது.

பங்களாதேஷில் அண்மையில் முடிவடைந்த தேர்தல்களில் ஜனாதிபதி எர்ஷாட்டின் ஆதரவுடனான ஜாதியா கட்சி வெற்றியீட்டியிருந்தது தெரிந்ததே.

அத்தேர்தல்களில் பல கடற்படையினரும் விமானப்படையினரும் தெரிவாகியிருந்தார்கள் அவர்களில் சிலர் மந்திரிகளாகவும் முன்னர் நியமனம் பெற்றிருந்தனர்.

முக்கிய எதிர்க்கட்சியான அவாமிலீக் தேர்தலின் செல்லுபடியாகாதென அறிவிக்கப்பட வேண்டும் எனவும் படையினர் மந்திரி சபையில் அங்கம் வகிக்கக் கூடாது எனவும் கோரியிருந்தது.

அதன் அடிப்படையிலேயே தான் சிவிலியன்கள் அடங்கிய புதிய மந்திரிசபை உருவாக்கப்படுவது என ஜனாதிபதி அறிவித்தார். (ஒ)

மதுரையில் ஏலக்காய் உற்பத்தி

மதுரை, ஜூலை 10 ஏலக்காய் உற்பத்தியை அதிகரிக்க இந்திய மத்திய அரசு பல திட்டங்களை உருவாக்கியுள்ளது.

மதுரைக்கருகே எட்டு கோடி ரூபா செலவில் ஏலக்காய் உற்பத்தி செய்யப்பட்டது. (ஒ)

ஜனதா சிபார்சு

சண்டிகார், ஜூலை 10 பஞ்சாப் மக்களின் உயிரையும் உடைமையையும் காக்கும் பொருட்டு இரு முனை திட்டம் ஒன்றை ஜனதாக்கட்சி சிபார்சு செய்துள்ளது.

பயங்கரவாதிகளின் வன்முறைச் சம்பவங்களை எதிர்த்துச் சமாளிக்கவும் மக்களின் கோரிக்கைகளுக்கு உரிய நடவடிக்கைகளை காலதாமதம் இல்லாமல் செய்யவும் அச் சிபார்சில் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

கடவுளுக்கு மகனைப் பலிகொடுத்த தந்தை

வடஇந்தியாவில் சம்பவம்

புதுடில்லி, ஜூலை 10 கடவுளைத் திருப்திப்படுத்த தனது ஒரேஒரு மகனைப் பலிகொடுத்தார் ஒரு தந்தை.

இச்சம்பவம் வட இந்தியாவில் உள்ள ஒரு நகரில் உள்ள பூங்காவில் பட்டப்பகலில் நடந்தது.

பலி கொடுக்கப்பட்ட பின்னர் தனது மகன் மீண்டும் உயிர்த்தெழுந்து அதிர்ஷ்டத்துடன் வீடு திரும்புவான் என்ற நம்பிக்கையிலேயே இப்படு பாதகச் செயலைப் புரிந்தார் என்று பொலீஸார் சொன்னார்கள்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

மங்கேராம் ஒரு மேசன் தொழிலாளி. சம்பவதினம் தனது ஒரே மகனான ராம் சேவக் (எட்டு வயது) கை அழைத்துக்கொண்டு பூங்கா சென்றார்.

தந்தையும் மகனும் ஒரு மரத்தின்கீழ் அமர்ந்துகொண்டனர். பின் கடலை வாங்கித்தருவதாகக் கூறிய தந்தை மகனை அழைத்துவந்தார்.

திடீரென்று பையினுள் வைத்திருந்த கோடரியை எடுத்த தந்தை மகனின் தலையை உடலில் இருந்து வெட்டித்துண்டித்தார்.

தந்தை மீது பொலீஸார் கொலைவழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அவருக்கு இரண்டு மக்கள் உண்டு (இ-எ)

வெளி உலகில்

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அரசமைப்புத் தீர்வு

உலகத் தமிழீழ மாநாடு தீர்மானம்

நியூயோர்க், ஜூலை 10 இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு அமெரிக்க, இந்திய மாதிரியிலான ஒரு சமஷ்டி அரசமைப்பைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

இப்படிக் கூறும் தீர்மானம் ஒன்று அமெரிக்காவில் நடந்த உலகத் தமிழீழ மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

நியூயோர்க் நகரில் இருந்து 70 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள நான்யூட் பகுதியில் இம் மாநாடு நடந்தது.

இந்தியா, பிரிட்டன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் மனித உரிமைகள் இயக்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் மாநாட்டில் பங்குபற்றினர்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு; நிறுவப்படும் தமிழீழம் அணிசேரா இயக்க நாடாகவே இருக்கும்.

● இலங்கைத் தமிழர் மீது இனப்படுகொலை நடத்தியவர்களை நியூரம்பேர்க் மாதிரியான விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.

● சர்வதேச ரீதியிலான தமிழீழ பிரசாரத்தை அதிகரிக்க வேண்டும்.

● இந்திய அரசு, மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களுடன் தொடர்பு கொள்ள புதுடில்லியில் தமிழீழ இணைப்பு அலுவலகம் ஒன்று நிறுவப்பட வேண்டும்.

மாநாட்டில் பேசியவர்கள் அனைவரும் இலங்கை "அரசின் புதிய யோசனைகளைப் புறக்கணிக்க வேண்டும்" என்று வற்புறுத்தினர்.

இலங்கை அரசின் இனப்படுகொலைக்கு இடம் கொடுத்து வரும் இந்திய அரசின் செயலை பலரும் கண்டித்தனர்.

இந்திய ஜனதாத் தலைவரான டாக்டர் சுப்பிரமணியசுவாமி உட்படப் பலரும் இம் மாநாட்டில் உரை நிகழ்த்தினர். (இ-எ-2)

டுனிஷியா பிரதமர் பதவி நீக்கம்

டுனிஸ், ஜூலை 10 டுனிஷியா நாட்டுப் பிரதமர் மொஹமட்அல் சாலியை அந்நாட்டு ஜனாதிபதி பதவி நீக்கம் செய்தார்.

நிதிமந்திரியாக இதுவரை கடமை புரிந்த ராஷித் ஸாபர் புதிய பிரதமராக நியமனம் பெற்றார். (ஒ)

அந்தமான் நிக்கோபார் மின் வசதி

போர்ட்பிளேயர் ஜூலை 10 அந்தமான் — நிக்கோபார் தீவுகளின் சகல கிராமங்களுக்கும் மின் வசதி அளிக்கப்படும்.

இந்தியாவின் யூனியன் பிரதேசமான இத்தீவுகளில் உள்ள 390 கிராமங்களில் 260 ஏற்கனவே மின்வசதி பெற்றுள்ளன.

பாவை பாடிய வாயால் கோவை பாடிய வாசகர்

அவருக்காக இறைவன் அற்புதம் செய்தான்

மாணிக்கவாசகர் குருபூசை தினம் இன்று அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

திருவாதவூரர் எனும் திருப்பெயருடன் பாண்டி நாட்டில் திருவாதவூர் பதியில் சம்புபாதாசிரியருக்கும் சிவஞானவதியாருக்கும் புதல்வராக அவதரித்து பதினாறு வயதினிலே பல கலைகளும் பெற்றுத் தேறியவர் மாணிக்கவாசகர்.

பல்கலைவல்ல பண்டிதராய் விளங்கிய திருவாதவூரரின் சொல்நயம், புலமைநலம் முதலியவற்றைக் கண்ணுற்ற பாண்டி நாட்டு மன்னன் இவருக்கு தென்னவன் பிரமராயர் எனும் சிறப்புப் பட்டத்தைச் சூடி முதலமைச்சராக்கினான்.

இக்காலகட்டத்தில் மன்னன் சொற்படி குதிரை வாங்க பலகோடி

சி. திருக்கேதீஸ்வரன்

பொன்னுடன் புறப்பட்டவர் திருப்பெருந்துறையிலே குருந்தமர நிழலிலே அடியார்கள் பலர் சூழ ஞானாசிரியர் ஒருவர் கையிலே 'சிவஞானபோதம்' எனும் நூலுடன் இருப்பதைக் கண்டார். அன்புடன் ஞானாசிரியனை அணுகி 'சிவமெது? ஞானமெது? போதமெது? என வினவ குருவாய் எழுந்தருளிய கடவுள் புன்முறுவலுடன் விடையிறுத்தார். இதனைக்கேட்ட வாதவூரர் தம்மையும் ஆட்கொள்ளும்படி திருவடிகளில் வீழ்ந்தார். ஞானகுருவும் அப்போது அருள் நோக்கம் செய்தார்.

வந்தவிஷயத்தை மறந்தார். கொண்டு வந்த பொன், பொருள் அனைத்தையும் குரு ஆணைப்படி திருப்பெருந்துறைக் கோயில் திருப்பணிக்கு நல்கினார். திருநீறும் கோவணமுடையும் தூய நீர்பொழியும் விழிகளுமுடையவரானார்.

இதனையறிந்த மன்னன் வாதவூரருக்கு ஓலை அனுப்ப வாதவூரர் இறைவனை வேண்டினார். இறைவன் ஆணைப்படி மன்னனிடம் சென்று ஆவணி மூலத்தில் குதிரைகள் வருமென மன்னனுக்குச் செப்பினார். இவையாவும் பொய்யென அறிந்த மன்னன் வாதவூரைச் சிறையில் இட்டு வருத்தினான்.

இவ்வாறு வாதவூரர் வருந்துவதை ஆலவாய்ப் பெருமான் அறிந்து நரிகளைப் பரிகளாக்கி வானவரைக் குதிரை வீரராக்கி தாமும் ஓர் குதிரை வீரராகி மன்னனிடம் சென்று குதிரைகளை அளித்து மறைந்தார். வாதவூரர் சிறையிலிருந்து விடுதலை பெற்றார். குதிரைகள் பந்தியில் சேர்க்கப்பட்டன. காரிருள் கூடியது. பரிகள் எல்லாம் நரிகளாகின. மன்னன் சினங்கொண்டான். வாதவூரரை அழைத்து உச்சி வெய்யிலில் நிறுத்தினான். வாதவூரர் வருத்த மிகுதியால் இறை [illegible]

இதனால் மன்னன் கலங்கினான். வாதவூரரை அடைந்து அடியவன் அறியாமையால் செய்த பிழைகளை மறந்து வையைப் பெருக்கைத் தணித்தருள வேண்டினான். வாதவூரர் இறைவனை வேண்டினார். வையைப்பெருக்கு தணிந்தது. ஊர்மக்கள் அணை கட்டப் புறப்பட்டனர். அப்போது பிட்டு வாணிச்சி அம்மையாருக்காக இறைவனே கூலியாளாகச் சென்றார். அங்கு தண்டிக்கப்பட்டார். இவை திருவாதவூரர் பொருட்டு இறைவன் செய்த செயலாகும். இச்செயலின் திருவாதவூரர் திருத்தொண்டர் என பாண்டியன் சிந்தையொடுங்கினான்.

ஒருசமயம் சிதம்பரத்தில் திருவாதவூரரும் புத்தபிக்கு ஒருவரும் சமயவாதம் நடத்தினார்கள். புத்தபிக்கு தோல்வி

ஞானக்கதிர்

கண்டார். அப்பொழுது அங்கே அந்தணர் ஒருவர் திருவாசகத்தை முறைப்படி கேட்டு எழுதினார். இறுதியில் 'பாவைபாடிய வாயால் ஓர் கோவை பாடுக' என வேண்டவே திருவாதவூரர் திருக்கோவை பாடியருளினார். பாடி முடிந்ததும் அந்தணரும் மறைந்தார். ஏடும் மாயமாகமறைந்தது.

தில்லைவாழ் அந்தணர்கள் திருவாசகத்திற்கும், திருக்கோவையாருக்கும் உரைவிரித்தருள வேண்டுமென வேண்ட இவர்களைத் தில்லையம்பலத்திற்கு வருமாறு திருவாதவூரர் அழைத்துச் சென்று நூலுக்குப் பொருள் இவரே என திருக்கூத்தாடும் அம்பலவாணர் திருவுருவைக் காட்டியபோது அங்கே தோன்றிய சிவப் பேரொளியில் கலந்து மறைந்தார்.

தற்காலிக பாடசாலையிலிருந்தே

இடம் பெயர்ந்த மாணவர்களும் பரீட்சைக்குவிண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 11 இடம்பெயர்ந்த மாணவர்கள் தற்போது தற்காலிகமாக படிக்கும் பாடசாலையிலிருந்தே ஜீ.சி.ஈ. சாதாரணப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என்று கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி வட்டாரக் கல்வியதிகாரிகள் மூலம் அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் பின்வரும் விடயங்களையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடம் பெயர்ந்த மாணவர்களின் இப்பரீட்சைக்கான தகைமைகள் போன்ற விபரங்களை மாணவர்களிடமிருந்து எழுத்துமூலம் உறுதிப்படுத்தப்பட்ட கையொப்பத்துடன் அதிபர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்விவரங்களில் தவறுகள் இருப்பின் பரீட்சை முடிவுகளை வெளியிடாது விட பரீட்சை ஆணையாளருக்கு சகல உரிமைகளும் உண்டு என்றும் குறிப்பிட்டுள்ளார். (இ-5)

சுழிபுரத்தில் சுகாதாரக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 11 சுழிபுரம் பகுதி சுகாதார அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெறும்.

சுழிபுரம் சுகாதார அபிவிருத்தி கழகத்தலைவர் திரு க. அருணாசலம் அவர்கள் தலைமை வகிப்பார்.

வைத்தியக் கலாநிதி ந. கனகசபை, வைத்தியக் கலாநிதி திருமதி. ஜீ கந்தசாமி, சுகாதாரப் போதனாசிரியர் திரு. கா. வைத்தீஸ்வரன், டாக்டர். சி ஜி ராசா, டாக்டர் என். சிவராசா, திரு. எஸ். சண்முகராசா, திரு. என் குணரத்தினம் ஆகியோர் கருத்துரை வழங்குவார் (இ)

பொய்யாமொழி

குறள்:

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னுஞ் செருக்கு.

பொருள்:

தீவினை செய்தலாகிய செருக்கைத் தீயினை உடைய பாவிகள் அஞ்சார். தவினை இல்லாத [illegible] அஞ்சுவர்.

வித்தாரம்

என்ன முரளியார்! விடிஞ்சதும் விடியாததுமாய் நடராசாவிட்ட வாறீர் எங்கே உம்முடைய ஒற்றைச்சில்லுக்கு ஏதேனும் சுகமில்லையா...?

இப்பதான் யாழ்ப்பாணத்து ரேட்டுகள், இல்லை முழு யாழ்ப்பாணத்து ரேட்டுகளையும் சொல்ல ஏலாது, அது தான் ரவுண் ரேட்டுகள் அவ்வளவு பரவாயில்லை. குண்டு குழியள் கொஞ்சம் குறைவு. அதாலை சைக்கிள் 'பஞ்சர்' ஆகிறதுக்கு வாய்ப்புக்குறைவு

ரேட்டுகளைப் பற்றிச் சொல்லத்தான், அந்தப் பகுதிக்குப் பொறுப்பான அமைச்சராகவும் இருக்கிற பிரதம மந்திரியாரைப்பற்றி ஞாபகம் வருகுது.

அரசாங்கத்தின்ரை புதிய யோசனைகள்பற்றி, அதுதான் அந்த மாகாணசபைகள் சம்பந்தமாய் அவர் மூச்சுவிடாமல் இருக்கிறார். நீ நோட்டம்பண்ணியேயோ தெரியாது

அரசியல் கட்சி மாநாடு தொடங்கினதாலை [illegible]யோடை நேரத்தைக் கடத்திப்போட்டார்.

அடுத்தநாள் அதிஉத்தமர் நடத்தின பத்திரிகைக்காரர் மாநாட்டிலையும் பிரதமருக்கு பிரதான இடம் இல்லை. [illegible], காமினியும், ஹமீதுவுந்தான் சின்னவாசைப் பக்கத்தில இருந்து பெரியவற்றை சார்பிலை விளக்கங்கள், விபரங்கள் சொல்லிக்கொண்டிருந்தினம்.

கிராமராஜ்யம்தடா, இதடா எண்டு ஏதோ எல்லாம் முந்தி வெளுத்து வாங்கின பிரதானியார் இப்பமாகாண சபை யோசனை வந்த பிறகு பெட்டிப் பாம்பாக அடங்கிப்போனார்; சுருண்டுபோனார்.

பெரியவருக்கும் பிரதானியாருக்கும் இடையிலை இப்ப கொஞ்ச இடைவெளி இருப்பதாகத்தான் கொழும்பிலை அரசியல் வட்டாரங்கள் சொல்லிக்கொள்ளுதுகள்

அதை ருசுப்படுத்துமாப்போலை காரியங்கள் நடக்கின்றன. உந்த லலித், காமினி எண்ட சின்ன வயசுக்காரர் வந்த பிறகு பிரதானியார் தூரத்தான் நிற்கிறார். அவர் தூர நிற்க நிற்க பெரியவரோடை பேத்தும் பலர் அருகில போகினம்

ஒரு காலத்திலை, யு. என் பி சேடம் இழுத்துக் கொண்டிருக்கையிக்கை பெரியவரும், வாய்க்கு வலியோ வயித்துக்கு வலியோ எண்டு, புளியம் பழமும் ஓடும் மாதிரி இருக்கையிக்கை, பிரதானியார் தான் கட்சியைப் பெரிய கஷ்டப்பட்டு உயிர்மீட்டு வளர்த்தவர், ஆனால் இப்ப அவர் ஒரு பக்கமாகிவிட்டார்.

சிலவேளை மாகாண சபைச் சாட்டோடை கட்சி இரண்டாகப் பிரிஞ்சாலும் ஆச்சரியப்பட ஒண்டுமில்லை.

நான் சொன்னதுகளை நீ நம்பயில்லை எண்டா இந்தா முக்கிய விடயத்தையும் கேட்டுவிட்டுப் போ.

அரசியல் கட்சிகள் மாநாடு இந்த மாசம் 15 ஆம் திகதி தொடங்கப் போகுதெல்லே. பிரதானியார் அதுக்கு முதல் நாளே வெளிநாடு பயணமாகப் போகிறார். ஆகஸ்ட் கடைசியிலை தான் நாடு திரும்புவாராம்.

அதி உத்தமர் சொன்னபடி பார்த்தா ஆகஸ்ட் பத்தியிலை மாகாணசபை சட்டம் பார்லிமெண்டுக்கு வந்துவிடும். அப்பவும் பிரதானியார் இருக்க மாட்டார்.

கிராமராஜ்யம் எண்டு "அழுதவர்" [illegible], [illegible] நழுவுறார் எதோ பெரிய விஷயம் இல்லாமலே போகும்!

NIRU Tuition Centre
Station Road, Kondavil.
A/L 87, 88 யூன் 15இல் ஆரம்பம்
87 - பௌதிகம்
சனி: 10.30, ஞாயிறு: 10-30 செவ்வாய்: 4-5
பொறியியலும் நீர் நிலையியலும்
88 ஒளியியல்
செவ்வாய்: 5-6, வியாழன்: 5-5
Mr சௌந்தி B.Sc (Hons)
87 - இரசாயனம் - சேதன இரசாயனம்; சனி - 9, ஞா - 9
அசேதன இரசாயனம்: செ - 3 - 4, வெள் - 3 - 4
88-பௌதிகஇரசாயனம்: Mr. செல்வா B.Sc. (Hons)
சனி: 8 9. ஞாயிறு: 8 - 9

உதயன்
11 - 07 1986 வெள்ளிக்கிழமை

NIRU Tuition Centre
Station Road, Kondavil
O/L DAY Classes பிரிவு 4
யூலை 14 காலை 8 முதல் 1.30 வரை
குறிப்பு: குறிப்பிட்டளவு மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
முற்றிலும் பாடசாலை வசதி கொண்டவை.
4 மாதத்திற்குள் முழுப் பாடத்திட்டமும் பூர்த்தியாக்கப்படும்.

மீனவர் கொலை;

இந்தியா ஆட்சேபம்

புதுடில்லி, ஜூலை 10

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து இந்திய அரசு நேற்று உத்தியோகபூர்வமாக இலங்கை அரசிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்தது.

இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாமல் இருக்க இலங்கை கடற்படையினரை எச்சரிக்கும்படியும் தனது ஆட்சேபக் குறிப்பில் இந்திய அரசு, இலங்கை அரசை வலியுறுத்திக் கேட்டுள்ளது.

ஜூலை முதல்வாரத்தில் இலங்கைக் கடற்படையினரால் 9 இந்திய மீனவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இந்தியா இந்த ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள இந்தியத்தூதர் ஜே என். டிக்ஸிற் ஆட்சேபக் கடிதத்தை வெளியுறவு அமைச்சு அதிகாரிகளிடம் நேற்றுக் கையளித்தார். (உ-எ)

தமிழர் ஆசிரியர் சங்கக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை.11

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அவசரக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை சங்கத்தின் யாழ் பணிமனையில் நடைபெறும்.

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தை தொடர்ந்தும் அங்கீகரிக்கப்பட்ட சங்கமாகக் கணிக்கும்படி கல்வி அமைச்சர் உத்தரவிட்டிருப்பதைத் தொடர்ந்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இன்றைய சூழ்நிலையில் சங்க நடவடிக்கைகளை எவ்வாறு விஸ்தரிக்கலாம் என்பது தொடர்பாகவும் ஆராய்வதற்கு இக்கூட்டம் கூட்டப்படுவதாகச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. மகாசிவம் தெரிவித்தார். (இ)

தமிழர் சடலங்கள் நேற்று அடக்கம்

திருகோணமலை ஜூலை 11

திருகோணமலை நகரில் கடந்த புதன் அதிகாலை ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 5 தமிழரின் சடலங்கள் நேற்றுக்காலை கத்தோலிக்கச் சேமக்காலையில் அடக்கஞ் செய்யப்பட்டது.

ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை நீக்கப்பட்டதும் சடலங்களை ஆஸ்பத்திரியில் பொறுப்பேற்ற இறந்தவர்களின் நண்பர்கள் இந்து மயானத்துக்குக் கொண்டு போகமுடியாத நிலையில் கத்தோலிக்கச் சேமக்காலையில் அடக்கஞ் செய்ய வேண்டியதாயிற்று.

திருகோணமலை இந்து இளைஞர் மன்றத்தினர் அடக்கஞ் செய்வதற்கான செலவுகளைப் பொறுப்பேற்றனர். (உ - எ -150)

யாழ் பல்கலை விருது வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் விளையாட்டுக் கவுன்சிலின் விருது வழங்கும் வைபவம் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியன், திருமதி நச்சினார்க்கினியன் ஆகியோர் பங்குபற்றுவர். (இ-எ)

இளைஞன் கைது

கொழும்பு, ஜூலை 11

கொழும்பு, செக்கடித் தெருவில் வைத்து மட்டக்களப்பு வாசியான பிரிட்டோ என்றழைக்கப்படும் குமார் என்பவரை பொலிஸார் கைது செய்தனர்.

வெளிநாடு போவதற்காக கொழும்புக்குச் சென்றிருந்த சமயமே இவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் விசாரணையின்போது, தான் 'ரெலோ' இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று அந்த இளைஞன் ஒப்புக்கொண்டதாக, பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ-2)

மன்னாரிலிருந்து

யாழ் வந்த இரு மீனவர்

தடுத்து வைத்து விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11

மன்னாரில் இருந்து சூட்டுக் காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்த இரண்டு பேர் கடந்த புதன்கிழமை முழங்காவில் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கடந்த முதலாம்திகதி மன்னார்க் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது கடற்படையினர் சுட்டதால் இந்தஇரண்டு மீனவர்களும் காயமடைந்தனர்.

இவர்களுடன் மீன் பிடித்துக் கொண்டிருந்த மேலும் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியானார்கள்.

காயமடைந்த இருவரும் மன்னார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பின்னர் கடந்த புதன்கிழமை யாழ் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக வந்து கொண்டிருந்தனர்.

இவர்கள் வந்த வாகனத்தை முழங்காவிலில் சோதனையிட்ட சிப்பாய்கள் இவர்கள் இருவரையும் தடுத்து வைத்தனர்.

பின்னர் இவர்கள் மீன் பிடிப்பவர்கள் தான் என தள்ளாடி இராணுவ முகாம் ஊடாக ஊர்ஜிதப்படுத்தப்பட்ட பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரும் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

ஆர். ஆறுமுகம் 28 வயது, பேசாலை.

கிருஷ்ணன் 24 வயது, பேசாலை

ஆகிய இருவருமே காயப்பட்டவர்கள் ஆவர்;

இவர்களுடன் சென்று பலியான இருவரின் பெயர்கள் வருமாறு:-

சம்சதின் — 30 வயது. ராஜா—21வயது.(இ 10)

மத்திய கல்லூரி விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை11

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 'ஆயர் தியோகுப்பிள்ளை' மைதானத்தில் ஆரம்பமாகும்.

வட்டாரக் கல்வியதிகாரி (விஞ்ஞானம்) திரு. எஸ் நடராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கல்லூரி அதிபர் திரு. வி. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகளைக் கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. வி. ரி. கணேசலிங்கம் கவனித்து வருகிறார். (உ)

புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 11

செட்டிகுளம் இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை 7 மணியளவில் நடைபவனியாகப் புறப்பட்ட இராணுவத்தினர் இலுப்பங்குளம் பகுதியை முற்றுகையிடுவதற்காக பூவரசங்குளம் வழியாக வந்து கொண்டிருந்தபோது விடுதலைப் புலிகள் அவர்களை இடைமறித்துத் தாக்கினர்.

இதனால் தேடுதல் வேட்டை பலிக்காத இராணுவத்தினர் உயிர் இழப்புகளுடனும் காயங்களுடனும் முகாம் திரும்பினர்.

இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எந்தவித இழப்புகளும் ஏற்படவில்லை.

— தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

ஏழு பேராளி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலி செலுத்தினர்.

அங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் டேவிற்சன் உரையாற்றினார்.

யாழ் நகரிலிருந்து நீண்ட ஊர்வலமாக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு சடலங்கள் கொண்டு செல்லப்பட்டன.

அங்கு சுமார் 5ஆயிரம் பொதுமக்கள்கூடி நின்று இறந்த போராளிகளுக்கு இறுதிமரியாதை செலுத்தினர்.

அங்கு அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

இறுதியாக 3[illegible] வைக்கு மரியாதை [illegible]டுக்கள் தீர்க்கப்ப[illegible]

உதைபந்தாட்டம்

யாழ் இந்து வெற்றி

கல்வித்திணைக்கள போட்டியில்

யாழ்ப்பாணம் ஜூலை 11

யாழ்-மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வரும் 15 வயதுப்பிரிவு நொக்அவுட் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி அணிக்கு இரண்டாவது வெற்றி கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் நடத்தும் இந்த நொக் அவுட் முறையிலான போட்டி யாழ் மாவட்டம் எங்கும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

யாழ் இந்து அணி சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய அணியை 2-0 என்ற கோல் அடிப்படையில் வென்றது

இதற்கு முன்னர் நடைபெற்ற கொழும்புத்துறை றோமன் கத்தோலிக்க சென் ஜோசப்ஸ் வித்தியாலய அணிக்குஎதிரான போட்டியிலும் யாழ் இந்து அணி 1-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது. (உ-7)

ஒஸ்மானியா அணிக்கு இரண்டாவது வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ் கல்வித் திணைக்களம் நடத்தும் நொக் அவுட் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ் ஒஸ்மானியா கல்லூரி 15 வயது பிரிவு அணிக்கு இரண்டாவது வெற்றி கிடைத்துள்ளது.

ஒஸ்மானியா அணி யாழ் மத்திய கல்லூரி அணியை 7-0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது

ஒஸ்மானியா அணி கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரான முதலாவது போட்டியிலும் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது

இந்த அணி முதல் சுற்று ஆட்டங்கள் யாவற்றிலும் வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

விபத்துக்குள்ளான வங்கி ஊழியருக்கு ரூ. 50 ஆயிரம் நஷ்டஈடு

யாழ்ப்பாணம், ஜூலை 11

கடமையில் இருக்கும் போது விபத்துக்குள்ளாகும் இலங்கை வங்கி ஊழியர்களுக்கான நஷ்டஈட்டுத்திட்டத்தின் கீழ் முதன் முறையாக யாழ்ப்பாண மாவட்டத்தில் ஓர் ஊழியருக்கு நஷ்டஈடாக ஐம்பதினாயிரம் ரூபா வழங்கப்பட்டது

இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர் திரு எஸ். ஸ்ரீரங்கநாதன் நஷ்டஈட்டை, விபத்துக்குள்ளான வங்கி பாதுகாப்பு ஊழியரான திரு பி. வேலுமயிலும் என்பவருக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சி புதனன்று நடந்தது.

1984 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி பருத்தித்துறை வங்கிக் கிளையில் ஏற்பட்ட சம்பவம் ஒன்றின் போது மயிரிழையில் உயிர்தப்பிய திரு. பி. வேலுமயிலும் அச்சம்பவத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தார். (உ-எ)

வங்கிகளில் பென்ஷன் பெறுவோரின்

ஜூலை மாத பற்றுச்சீட்டு அனுப்பப்பட்டுவிட்டது

யாழ்ப்பாணம் ஜூலை 11

வங்கிகளில் பென்ஷன் பெறுவோருக்கான ஜூலை மாத பற்றுச் சீட்டுக்கள் அவர்களது விலாசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தவறுதலான விலாசங்களைத் தந்தவர்கள் வங்கிகளில் விசாரித்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று உதவி அரச அதிபரும் பொதுசன தொடர்பதிகாரியுமான த. குலசேகரம் அறிவித்துள்ளார்.

மேலும் சென்றமாத பென்ஷன் கொடுப்பனவுகளின் போது யாழ் ஆஸ்பத்திரிவீதி இலங்கை வங்கிக்கிளையில் ஏற்பட்ட தாமதத்தை நிவர்த்தி செய்ய உதவிய, ஓய்வூதியம் பெறுவோர் நலன்புரிச் சங்கத்தை சேர்ந்த இருவருக்கு தனது நன்றியையும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் முதல் பென்ஷன் பத்திரத்தில் முத்திரை ஒட்டத்தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 1 ரூபா முத்திரை ஒட்டியே பென்ஷன் பெறப்பட்டு வந்தது.

இம்மாதம் முதல் அப்பணம் பென்ஷன் பணத்திலிருந்து கழிக்கப்படும். (இ - 5)

பொருட்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ் பெரியகடை பாரதி பாஷா வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்விப் பொருட்காட்சி நடைபெறும்.

யாழ் வட்டாரக்கல்வி அதிகாரி திரு இ. சிவானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-எ)

போராளிகளின் சிலைகளுக்கும் மக்கள் விடு[illegible]

நீர்வேலி மூத்த நயினார் கொடி

நீர்வேலி ஜூலை 11

நீர்வேலி வாய்க்கால்தரவை மூத்த நயினார் கோவில் வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் நடைபெறும்.

வீர அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 11

ஆழ்கடலில் அகால மரணமடைந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி போராளிகளுக்கு தமிழ் ஈழ இராணுவமும் வீர அஞ்சலி செலுத்தி இருக்கிறது.

ஈ. பி. ஆர். எல். எல். இயக்கத்திற்கு தமது அனுதாபத்தை தெரிவித்து விடுத்தஅறிக்கையிலேயே வீர அஞ்சலி பற்றித்தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திருமலை...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினர் கூடுதலான தொகையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

செவ்வாய் தொடங்கிய வன்செயல்களைத் தொடர்ந்து திருமலை நகரில் புதன் காலைதான சுமார் 40 தமிழர்கள் [illegible] படவில்லை. (உ-எ-150)

எமது பிரச்சினைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

அஞ்சலிக் கூட்டத்தில் மறைமாவட்ட முதல்வர்

யாழ்ப்பாணம், ஜூலை 11

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 பேர்களின் ஞாபகார்த்தமாக எழுப்பப்பட்ட இந்த நினைவுத் தூபியுடன் எமது பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இது தொடர்கதையாக மாறாமல் இருக்க வேண்டும் என நான் வேண்டிக் கொள்கிறேன்.

நினைவுத் தூபியைத் திரைநீக்கம் செய்து வைத்து உரையாற்றிய மறைமாவட்ட முதல்வர் அருட்திரு. மைக்கல்சாமி அடிகளார் இப்படிச் சொன்னார்

மண்டைதீவில் படுகொலையானோருக்கு அஞ்சலிக் கூட்டம் ஒன்று நேற்று குருநகரில் நடைபெற்றது.

அருட்திரு. மைக்கேல் சாமி அடிகளார் தமது உரையில் மேலும் சொன்னதாவது:-

1977ம் ஆண்டு இனக்கலவரங்களில் பாதிக்கப்பட்டு வந்த மக்களுக்கு ஆறுதல் கூறி அவர்களை நிரந்தரமாக பல இடங்களில் வாழ வைத்தோம்.

1981 ஆம், 83 ஆம் ஆண்டுகளில் உயிர் பறிகொடுத்து உறுப்பு இழந்து—உடைமை இழந்து வந்தவர்களுக்கு பணிபுரிந்தோம், அவர்களையும் வாழ வைத்தோம்.

ஆனால் இப்பொழுது இறந்தவர்களின் உடல்களைப் பார்வையிடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

இது தான் ஆண்டவன் எமக்கு வழங்கிய விதி.

இப்படி அவர் கூறினார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த டாக்டர் பிலிடஸ் தமது உரையில் —

இந்த நாட்டு மக்கள் தொடர்ந்து ஒற்றுமையாக வாழ நினைத்திருந்தால் இப்படியான படுகொலைகள் நிகழ மாட்டாது என்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதியனுப்பிய பேச்சும் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது அதில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

இன்று நாம் திறந்து வைக்கும் நினைவுச் சின்னம் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறைப் போராட்டத்தின் அழியாத சான்றாக நின்று நிலைக்கப் போகின்றது

தமிழர்கள் என்பதற்காகவே கொலை செய்யப்பட்ட இவர்கள் வரலாற்றின் குறிப்புகளில் தவறாது இடத்தைப் பெறுகின்றனர்.

சிலுவைப்பாடுகள் பற்றிய உண்மைகள் உங்களுக்குப் புதியவை அல்ல சிலுவைப்பாடுகள் தரும் மரணிப்புகள் உண்மையில் மரணங்களே யல்ல. அவை உயிர் மீட்புகளே என்பதை சிலுவை நாயகன் வரலாற்றில் நாம் அறிவோம்

இந்த நண்பர்கள் முப்பத்தொரு பேருடைய மரணமும் அந்தச் சிலுவைப்பாடுகளில் மேலுமொரு சாட்சியாக அமைகிறது.

மரணித்தவர்கள் மனிதர்கள் ஆனால் இந்த மரணத்தில் பின் புத்துயிர் பெறப் போவது எம் இனம்.

இந்த ஒரு நம்பிக்கை தான் இந்த மரணங்களின் கொடூரத்திலிருந்து சோகங்களிலிருந்து நாம் சிறிதேனும் விடுபட எமக்கு இடம் தருகிறது. — என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் உரையாற்றுகையில்:-

குருநகர் பாஷையூர் மக்கள் அரசின் கட்டுப்பாடுகளினால் வறுமைக் கோட்டின் அடியாரத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர் என்றார்.

உதவி அரசாங்கஅதிபர் திரு க.மாணிக்கவாசகர், பாஷையூர் புனித பங்குத் தந்தை அருட்திரு பிரான்சிஸ் உட்பட பலர் உரையாற்றினர் (உ-10)

இராணுவ..

கொள்ளப்பட்டது.

அதன் பின் லொறிச் சாரதியை பலமாக தாக்கினராம்

லொறியை நோக்கி துப்பாக்கியால் சுட்டதால் கிளீனர் காயம் அடைந்தார்.

காயமடைந்த லொறிக் கிளீனர் திரு. எஸ் ராஜகோபால் (34 வயது) தற்போது யாழ்-ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

லொறியைச் செலுத்தி வந்த சாரதி திரு குணபாலா என்று தெரிய வருகிறது. (இ-10)

கிராம சேவகர்கள் கடத்தப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 11

அதிகாரிகளின் பணிப்பின் பேரில் கிளிநொச்சி இராணுவ முகாமுக்குச் சென்றுகொண்டிருந்த கிளிநொச்சிப் பகுதி கிராம சேவையாளர்கள் சிலர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் நேற்றுக் கடத்தப்பட்டனர்

உணவு முத்திரை விநியோகம் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தவே இவர்கள் இராணுவ முகாமுக்குச் செல்லவிருந்தனர் என்று அறியப்பட்டது. (உ)

11 தமிழர்---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

திரிக்கு நேற்றுக் காலை கொண்டு வரப்பட்டன.

சம்பவம் நடந்த இடத்தை ஹெலிக்கொப்டரில் சென்று பார்வையிட்ட திருமலை பதில் நீதிவான் திரு எம் கே. செல்லராசா பின்னர் ஆஸ்பத்திரியில் மரண விசாரணைகளை நடத்தினார்.

வைரமுத்து, சின்னத்துரை, கணபதிப்பிள்ளை குலசேகரம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

அவர்கள் சொன்னதாவது:-

"புதன்கிழமை மாலை 4 30 மணி இருக்கும் முள்ளிப்பொத்தானை 9 ஆம் கொலனியில் உள்ள எங்கள் வீடுகளில் தங்கியிருந்தோம்.

திடீரென்று 16 பேர் வரையில்-ஊர்காவல் படையினர்-துப்பாக்கிகளுடன் எங்கள் வீடுகளுக்கு வந்தனர் எல்லாரையும் வெளியில் வரும்படி கூறிவிட்டு சுடத் தொடங்கினர்.

நாங்கள் ஓடிச் சென்று காட்டுக்குள் பதுங்கிக் கொண்டோம்.

பின்னர் திரும்பி வந்து பார்த்தபோது 11 பேர் இறந்து கிடக்கக் கண்டோம். மறுநாள் காலை கந்தளாய்ப் பொலிஸார் வந்து சடலங்களைத் திருமலை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர். காயமடைந்தவர்களை கந்தளாய் ஆஸ்பத்திரிக்கு முதலில் அனுப்பிவைத்தனர்." இப்படி அவர்கள் சாட்சியத்தில் தெரிவித்தனர்

பதில் நீதிவான் கொலைகள் என்று தீர்ப்பு அளித்தார். (உ - எ - 150)

சந்திரஹாசன்

லக்ஷ்மி நாகநாதன்

இருவர் பெயர்களும் சபையில்!

கொழும்பு, ஜூலை 11

தந்தை செல்வாவின் மகன் சந்திர ஹாசன், டாக்டர் நாகநாதனின் மகள் செல்வி லக்ஷ்மி நாகநாதன் ஆகியோர் பற்றி நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது

நாடாளுமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை கூடியபோது மகரகம எம். பி திரு. தினேஷ் குணவர்த்தன (மக்கள் ஐக்கிய முன்னணி) பேசுகையில் இவர்கள் பற்றி சில விவரங்களை வெளியிட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவராக இருந்த திரு செல்வநாயகத்தின் மகன் சந்திரஹாசனின் பாஸ்போர்ட் காலாவதியான பின்னர் எப்படியோ புதுப்பிக்கப்பட்டுவிட்டது புதுபிக்கப்பட்டதன் மர்மம் என்ன? இது சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்க இந்திய உதவியை நாடத் தவறியது ஏன்?

செல்வி லக்ஷ்மி நாகநாதன் மேற்கு ஜெர்மனியில் இலங்கைத் தூதராக பணியாற்றியவர் அக்காலத்தில் இலங்கைத் தூதரகத்தில் இருந்து சுமார் 300 பாஸ்போர்ட்டுக்கள் காணமற்போய்விட்டன. இன்று செல்வி லக்ஷ்மி நாகநாதன் எங்கு இருக்கிறார் என்பதை எல்லோரும் அறிவர். அதை நான் சொல்லமாட்டேன்.

இப்படி திரு. தினேஷ் குணவர்த்தன சொன்னார். (அ-ச - 2)

திங்களன்று

லொறி உரிமையாளர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

எதிர்வரும் திங்கட்கிழமை லொறி உரிமையாளர் சங்கம் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளது.

தற்பொழுது யாழ்-கொழும்பு சேவைகளில் ஈடுபடும் லொறிகளுக்கு ஏற்பட்டிருக்கும் அவலநிலையையும், பலாலி, கோட்டை இராணுவ முகாம்களுக்குச் சென்று பெர்மிட் பெறுவதில் ஏற்படும் சிரமங்கள் பற்றியும் எடுத்துக் காட்டவே லொறி உரிமையாளர் சங்கம் இந்த ஊர்வலத்தை ஒழுங்கு செய்துள்ளது.

வடபிராந்தியலொறிப் போக்குவரத்து உரிமையாளர் சங்கக் கூட்டத்தில் இதுபற்றி முடிவு செய்யப்பட்டது.

திங்கட்கிழமை காலை ஏழு மணியளவில் கோப்பாய் கந்தசுவாமி கோவிலடியில் இருந்து ஆரம்பமாகும் இந்த ஊர்வலம் பருத்தித்துறை வீதியூடாக யாழ் நகரை அடைந்து பின்னர் ஆஸ்பத்திரி வீதி வழியாக யாழ் செயலகத்தைச் சென்றடையும்.

யாழ் செயலகத்தில் அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றும் சமர்ப்பிக்கப்படும்.

ஊர்வலத்தில் லொறிகளும் கலந்து கொள்ள உள்ளன.

இதே தினம் கடைகளைப் பூட்டி, ஊர்வலத்திற்கு ஆதரவு வழங்குமாறு யாழ் லொறி உரிமையாளர் சங்கம் வர்த்தகர் சங்கத்தைக் கேட்டுள்ளது. (இ - 10-5)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 11—07—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road. JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, SriLanka Under Number QJ 60 N86: